# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 56 பிரசோற்பத்தி தை 08 – 22. 01. 1992 – புதன்


## வடமராட்சியில் குண்டு வீச்சு பெண் உட்பட இருவர் பலி!

வடமராட்சிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒரு வயோதிபப் பெண்ணும், 5 பிள்ளைகளின் தந்தையான தபால் ஊழியர் ஒருவரும் இதலத்தில் உயிரிழந்தனர்.

மணற்காடு பகுதியில் காலை 9 30 மணியளவில் மூன்று குண்டு வீச்சு விமானங்கள், இரு ஹெலிகப்டர்களின் உதவியுடன் தாக்குதலில் ஈடுபட்டன. அதேஇடத்தைச் சேர்ந்த மரியாம் பிள்ளை இரத்தினம் (60) என்ற வயோதிப மாது மரணமானார். சில்லாலையைச்

—04 ஆம் பக்கம் பார்க்க

# சீனன்குடா விமானப்படை தளத்தில் சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்தது

## 30 விமானப் படையினர் பலி; 60 பேர் காயம்

## ஆயுதக்களஞ்சியம் தகர்ந்தது; விமானங்களும் சேதம்

திருகோணமலை சீனன்குடா பிரதான விமானப்படைத்தள ஆயுதக்களஞ்சியத்தில் நேற்றுக்காலை சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. இதனால் 30 இற்கும் மேற்பட்ட விமானப் படையினர் பலியானதாகவும் 60 பேர் காயமடைந்ததாகவும் பல விமானங்கள் சேதமடைந்ததாகவும் சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் அறிவித்தன.

நேற்றுக்காலை குச்சவெளி அருகே நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்று நடைபெற்று சில நிமிட நேரங்களில் சீனன் குடா விமானப்படைத் தளத்தில் குண்டு வெடித்தது.

### ஆயுதக்களஞ்சியம் தகர்ப்பு

குண்டு வெடிப்பினால் விமானத்தளத்தின் ஆயுதக் களஞ்சியம் தகர்த்தெறியப் பட்டது

### விமானங்கள் சேதம்

அருகிலுள்ள விமானப் படை விமானங்கள் நிறுத்தும் இடத்தில் தரித்து நின்ற பல விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் பலத்த சேதமடைந்ததாக பி பி ஸி அறிவித்தது

### இடிபாடுகளே எஞ்சின

ஆயுதக்களஞ்சியம் உள்ள பகுதியில் இடிபாடுகளும் தரை

...04 ஆம் பக்கம் பார்க்க

# குச்சவெளியருகே புலிகள் தாக்குதல்

## 20 படையினர் ஸ்தலத்தில் பலி

நேற்றுக்காலை திருகோணமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 20 இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 8 35மணியளவில் சம்பைபாறு இராணுவ முகாமிலிருந்து குச்சவெளி இராணுவ முகாமுக்கு 40 பேரடங்கிய இராணுவ அணியொன்று ரோந்து சென்றது.

இந்த ரோந்து அணி மீது இரவைக்கேணி என்ற பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இராணுவ அணியை சுற்றி வளைத்து புலிகள் அரைமணி நேரம் இத்தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெற்ற போது படையினருக்கு உதவ குச்சவெளி இராணுவ முகா

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

குச்சவெளியருகே நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயு

- ★ ஜி. பி. எம். ஜி துப்பாக்கி - 1
- ★ ஏ. கே. எல். எம். ஜி - 1
- ★ ரி- 56 மட்மொடல - 5
- ★ ரி - 56 II - 3
- ★ ரி - 81 - 5
- ★ ஏ கே எல் எம். ஜி ரம் மகஸீன் - 5
- ★ ரி- 56 மகஸீன்கள் - 58

## ஜே.வி.பி. சந்தேக நபர்கள் சிறையில் உண்ணாவிரதம்

தெற்கில் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 100 ஜே. வி. பி. சந்தேக நபர்கள் கடந்த வாரம் முதல் சிறையில் உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

நீதி விசாரணை இன்றி தடுத்துவைக்கப்பட்டமை சிறையில் நடத்தப்படும் விதம் ஆகியவற்றைக் கண்டித்தே இவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

## மடு அகதி முகாமில் நோயினால் நால்வர் மரணம்

மடுக்கோவில் அகதிமுகாமில் தீவிரமாகப்பரவியுள்ள நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற பலதரப்பட்ட தொற்றுநோய்களுக்குள்ளாகி கடந்த இருவாரத்தில் நால்வர் மரணமானதாகத் தெரியவருகிறது.

மேலும் பலர் அங்கு இந்த தொற்று நோய்களால் கடும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 07

## மன்னாருக்கு கல் சிமெந்து அனுப்பி வைப்பதில் சிரமம்

மன்னாரில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிமெந்து, கல் அனுப்பி வைக்குமாறு பிரதமர் விஜேதுங்கா சுகாதாரத்துறையில் இடம் பெறும் நடமாடும் செயலகத்தில் வைத்து அதிகாரிகளுக்கு உத்தர விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

மன்னாருக்கு கல், சிமெந்தை கப்பலில் அனுப்புவது சிரமமென அதிகாரிகள் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தரைமார்க்கமாக கொண்டு செல்வது தான் சுலபம் என்றும் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (06)

## மீண்டும் சந்தர்ப்பம்

அவசர சிகிச்சைக்காக கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்கு பதிவு செய்து சென்ற

## அவ்ரோ

## பதுங்கித் தாக்கி

விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்!

மாகசின் - 1

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 1
- ★ ரி- 56 பட்மொட்டை - 5
- ★ ரி- 561 - 5
- ★ ஏ கே எல் எம். ஜி ரம் மகஸீன் - 5
- ★ ரி- 56 மகஸீன்கள் - 52
- ★ ரி- 81 மகஸீன்கள் - 17
- ★ ஜீ. எம். ஜி. பி. லிங் - 475
- ★ ஏ. கே. எல். எம். ஜி லிங் -445
- ★ 7.62 ஐ எம் ரவைகள் - 2645
- ★ நேட்டோ ரவைகள்- 293
- ★ ஜே. ஆர் குண்டுகள் - 8

மற்றும் இராணுவ உபகரணங்கள்

## காயமடைந்தவர்கள் விமானங்கள் மூலம் கொழும்புக்கு

சீனன்குடா விமானப் படைத்தளத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு வெடிப்பு சம்பவத்தில் பல படையினர் படுகாயமடைந்த நிலையில் விமானங்களில் அங்கிருந்து அகற்றப்படுகின்றனர்.

விமானங்கள் மூலம் பல விமானப்படை சிப்பாய்கள் கொழும்பு கொண்டு வரப்படுவதாக பி.பி.ஸி, நேற்றிரவு அறிவித்தது.

### அதிகாரிகள் குழப்பம்

## கைக்குண்டு வெடித்தே வெடிவிபத்து ஏற்பட்டதாம்

சீனன்குடா விமானத் தளத்தில் ஏற்பட்ட வெடிகுண்டுச் சம்பவம் தவறுதலாக கைக் குண்டு ஒன்று வெடித்ததிலேயே ஏற்பட்டது எனக் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

திருமலை குச்சவெளியில் நேற்று நடைபெற்ற அதிரடித் தாக்குதலில் மேஜர் குகதாஸ் (சி. முருகையா திருமலை), கப்டன் ஜெயன் (நா. தங்கராசா பன்குளம்), கப்டன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அவ்ரோ குண்டு வீச்சு

நேற்று முன்தினம் காலை மன்னாரில் 11 ஆம் கட்டை, முருங்கன் பகுதியில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சு தாக்குதலை மேற்கொண்டது.

அவசர சிகிச்சைக்காக கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்கு பதிவு செய்து சென்ற கப்பலில் போகத்தவறியோர் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்பதாக சகல ஆவணங்களுடனும் யாழ் வைத்திய சாலைப் பணிப்பாளரை சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (04)

## பதுங்கித் தாக்கி பொதுமக்கள் பலி

மட்டக்களப்பில் காஞ்சிரைக்காடு என்ற பகுதியில் படையினர் பொதுமக்கள் காணாதவாறு பதுங்கியிருந்து தாக்கியதில் 4 பொதுமக்கள் பலியாகினர்.

# அகதிகளை அனுப்பும் திட்டத்திற்கு திருமலைச் சம்பவம் பலத்த அடி!

இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளை இந்திய அரசும் ஸ்ரீலங்கா அரசும் இணைந்து மீண்டும் இலங்கைக்குக் கொண்டுவரும் முயற்சிக்கு திருமலையில் நேற்று நடைபெற்ற இரு சம்பவங்களும் பலத்த அடியைக் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து முதல் கட்டமாக நேற்று முன்தினம் புறப்பட்ட தமிழ் அகதிகள் இன்று திருமலை துறைமுகம் வந்து சேரவுள்ள நிலையில் இத்தாக்குதல்கள் முக்கியத்துவம் வாய்ந்தன என

—04 ஆம் பக்கம் பார்க்க

பிரிட்டிஷ் சிவில்சேவையாளரின் மகஜர் கூறுகிறது

# 'கிழக்கு தமிழ் மாகாணமே'

## உலகப் போருக்கு முன்னர் சிங்களவர் தொகை அங்கு குறைவு

கிழக்கு மாகாணம் தமிழ் மாகாணம் தான் என்று கொழும்பு நாளிதழ் ஒன்று தனது வார வெளியீட்டில் வெளியிட்டுள்ள வாராந்த விமர்சனத்தில் ஆதார பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

'முதலாவது உலகமகா யுத்தத்திற்கு முன்னர் அம்பாந்தோட்டையில் உதவி அரசாங்க அதிபராக இருந்த பிரிட்டிஷ் சிவில் சேவையாளரான லேனார்ட் வூல்வ் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்கு கையளித்த மகஜர் ஒன்றில் கிழக்கு மாகாணத்தை தமிழ் மாகாணம் என்று தான் குறிப்பிட்டிருக்கின்றார்' என்று இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது 'இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக்காலகட்டத்தை எடுத்துப் பார்த்தால் கிழக்குமாகாணத்திலே தமிழ் பேசும் மக்கள் தான் அதிகம் பெரும்பான்மையினராக வாழ்ந்ததைக் காண முடியும். சிங்களவர்கள் 8 சத விகிதத்தினராகவே இருந்தனர்.

கிழக்கிலே இன்று சிங்களவர்களின் சனத்தொகை 28 சத வீதமானதற்குக் காரணம் டி. எஸ். சேனநாயகா முதற்கொண்டு இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களே.

தமிழ் பெரும்பான்மை பிரதேசங்களைச் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களாக மாற்றுவதே இக் குடியேற்றங்களின் நோக்கமாகும்.

இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டியது இனப் பிரச்சினையின் அர்த்தமுள்ள தீர்வுக்கு அத்தியாவசியமானதாகும்.

ஆகவே வடக்கையும் கிழக்கையும் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?

## தொண்டாவின் பாதை மயானத்திற்கே!

சிங்கள விமர்சகர் கருத்து

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சமர்ப்பித்துள்ள சமாதானத் திட்டம் குறித்து பலவாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள இவ்வேளையில் றெப்வங்கில் என்ற விமர்சகர் சண்டே ரைம்ஸ் வார இதழுக்கு எழுதியுள்ள விமர்சனத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

'சிலபேர் நிலமட்டத்திலேயே இருக்கிறார்கள் என்பது அறிஞர்களின் கூற்று. ஆனால் இப்பொழுது தொண்டமானோ வெறாந்தையில் நிற்கிறார். அவர் விரும்பும் பாதையில் அனுமதிக்கப்பட்டால் நாங்கள் எல்லோரும் மயானத்தில் தான் இருப்போம்.' (16)

## தொழில் நுட்பப் பாடத் திட்டம் இதுவரை இங்கு வந்துசேரவில்லை!

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் தற்போது ஆண்டு பத்து வகுப்பில் கற்கும் மாணவர்களுக்குரிய தொழில் நுட்பப் பாடநெறிக்கான பாடத் திட்டம் கல்வி அமைச்சினால் இதுவரை இங்கு அனுப்பப்படவில்லை.

சென்றாண்டு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்நெறிக்கு ஆண்டிறுதியில் நடைபெற வேண்டிய கனிஷ்ட தொழில் நுட்பச் சான்றிதழ்ப் பரீட்சையும் இம்மாவட்டத்தில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாட நெறிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் கற்கும் மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (37)

## சகல அபிவிருத்திச் சபைகளும் இவ்வருட இறுதிக்குள் இயங்கும்

சகல பாடசாலைகளிலும் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் இவ்வருட இறுதிக்குள் நிறுவப்பட்டுவிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைகளின் குறை நிறைகளை அறிந்து அதற்கேற்ப தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டிய பொறுப்பு இந்தப்பாடசாலை அபிவிருத்திச் சபைகளிடம் ஒப்படைக்கப்படும்.

பாடசாலைச் சூழலிலுள்ள புத்திஜீவிகளை உள்ளடக்கியதாக இந்த அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்படவுள்ளன

## இலவச பாடப் புத்தகங்கள்; இதுவரை 300 கோடி ரூபா செலவு!

இலவசப் பாடப்புத்தகங்களை அச்சிட்டு அவற்றை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு மட்டும் அரசு இதுவரை 300 கோடி ரூபாவை செலவிட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன

இவ் வருடம் மட்டும் இத்திட்டத்திற்கமைய வழங்குவதற்கென 160 இலட்சம் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

### இன்று விசாரணை

பத்மநாபா கொலை வழக்குத் தொடர்பாகக் கைதாகியுள்ள முன்னாள் தமிழக அமைச்சர் சுப்புலட்சுமி, ஜெகதீசன் ஆகியோரின் பிணை மனு மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

## 'இராணுவத்தினர் கூட்டிச் சென்ற இளைஞர்கள் சடலங்களாக எரிவதைக் கண்டேன்'

கொக்கட்டிச்சோலை விசாரணையில் சாட்சியம்

'வெடிச் சத்தம் கேட்டதும் எனது மகனுடன் ஓடிச்சென்று மகிழடித் தீவுப் பாடசாலையில் தஞ்சமடைந்தேன். அங்கு வேறு பலரும் இருந்தனர். நாங்கள் சென்ற சொற்ப நேரத்தில் மூன்று இராணுவத்தினர் அங்கு சீருடையில் வந்தனர். அவர்கள் அங்கிருந்த 20 இளைஞர்களைப் பலவந்தமாக வெளியே கூட்டிச் சென்றனர். எனது மகனையும் அவர்கள் அவ்வாறு கூட்டிச் சென்றனர்

இச்சம்பவம் பிற்பகல் 1.30 மணி போல் நடந்தது ஐந்து மணியளவில் நான் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தைச் சென்று பார்வையிட்டேன். அந்த இடத்தில் பாடசாலையிலிருந்து இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் டயர்களினால் எரிவதைக் கண்டேன். அதில் எனது மகனின் சடலமும் இருந்தது.

இவ்வாறு கொக்கட்டிச் சோலை சம்பவம் தொடர்பான விசாரணையின்போது சாட்சியமளித்த கே. எஸ். இரத்தினவேல் தெரிவித்தார்.

## அகதிகளுடன் வருகிறார்கள் 'குண்டு' நிபுணர்களும்!

நேற்று முன் தினம் சென்னையிலிருந்து திருமலையை நோக்கி புறப்பட்ட தமிழ் அகதிகளை ஏற்றி வரும் 'அக்பர்' என்ற கப்பலில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 10 குண்டு நிபுணர்களும் பயணம் செய்வதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களைத் தவிர இந்திய கடற்படையைச் சேர்ந்த 30 விசேட கமாண்டோக்களும் இக்கப்பலில் அகதிகளுடன் பயணம் செய்வதாக முன்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணத்தில் இந்துசமயப் பேரவை ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் கூட்டம் எதிர்வரும் 25-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்கள். (37)

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல்; இமெல்டாவும் போட்டியிடுவார்

பிலிப்பைன்ஸில் மே மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவி திருமதி இமெல்டா மார்க்கோஸ் அறிவித்துள்ளார்

நேற்று முன் தினம் மணிலாவில் களியாட்ட விழாவொன்றில் உரையாற்றுகையில் இமெல்டா மார்க்கோஸ் இதனை அறிவித்தார்.

1986-ம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி அக்கினோ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் முதல் முறையாக இதே களியாட்ட விழாவிலேயே உரையாற்றியிருந்தார்.

பல மாதங்களாக அமெரிக்காவில் தங்கியிருந்த இமெல்டா மார்க்கோஸ் பிலிப்பைன்ஸ் அரசின் பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் மணிலா திரும்பியிருந்தார்.

## எம்பிலிப்பிட்டியவில் காணாமற்போன 31 மாணவர்களைப் பற்றி ஆராய ஆணைக்குழு தேவை

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

1989 ஆகஸ்ட்டுக்கும் 1990 ஜனவரிக்கு மிடைப்பட்ட காலத்தில் எம்பிலிப்பிட்டியவில் 31 பாடசாலை மாணவர்கள் காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

காணாமற் போயிருக்கும் இந்த மாணவர்களின் பெற்றோரும் பாதுகாவலர்களும்

## காங்கிரஸ் மைதானத்தில் வைத்து ஜெயலலிதாவை பாராட்டினார் சோ!

தமிழகத்தில் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி

## ஆஸி போட்டியின் 2-வது ஆட்டநிலைமை; தோல்வி இந்தியாவைத் துரத்துகிறது!

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த மூன்று நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒருநாள் போட்டியின் இரண்

50 பந்து மாற்றங்களில் 9 இலக்குகளை பறிகொடுத்து 208 ஓட்டங்களைப் பெற்றது. (16)

## ஜெயலலிதாவை பாராட்டினார் சோ!

தமிழகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா 'தடா'ச் சட்டத்தை தி.மு.க., திராவிடர் கழகம் முதலான தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காகப் பயன்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ள இவ்வேளையில் ஜெயலலிதா நடந்து கொள்ளும் விதத்தை 'துக்ளக்' ஆசிரியர் சோ (இராமசாமி) பாராட்டியுள்ளார்.

சென்னை தேனாம்பேட்டைக் காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற 'துக்ளக்' 22வது வருட பூர்த்தி விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத் 'தடா'ச் சட்டத்தை ஜெயலலிதா துஷ்பிரயோகம் செய்வதாகக் கூறியுள்ள கலைஞர் மு. கருணாநிதி இதற்கு எதிராகப் பெரும் போராட்டமொன்றை நடாத்தப்போவதாகவும் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

காணாமற் போயிருக்கும் இந்த மாணவர்களின் 'பெற்றோரும் பாதுகாவலர்களும் சட்டத்தரணிகள் கவனத்துக்கு முறையிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## டாக்கா படகு விபத்தில் 40 பேர் உயிரிழந்தனர்!

பங்களாதேஷில் டாக்கா அருகில் நிகழ்ந்த படகு விபத்தொன்றில் 40 பேர் மரணமாகினர். அப் படகில் பயணம் செய்த ஏனைய 12 பேர் நீந்திக் கரை சேர்ந்து விட்டனர்.

முஸ்லிம் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு இவர்கள் திரும்பிக்கொண்டிருக்கையிலேயே இச் சம்பவம் நிகழ்ந்தது.

## சிறைகளில் மேலை நாட்டவர்கள்

இலங்கையில் பெருமளவு வெளிநாட்டவர்கள் போதை வஸ்து தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறை வைக்கப்பட்டுள்ளனர். (22)

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த மூன்று நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒரு நாள் போட்டியின் இரண்டாவது ஆட்டத்திலும் இந்தியா 6 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இந்திய அணி, 50 ஆவது பந்து மாற்ற பந்து வீச்சு ஆரம்பமானபொழுது இந்த ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்கு 9 ஓட்டங்களை மாத்திரமே பெற வேண்டி இருந்தது. ஆனால் இந்திய அணி துடுப்பாட்டக்காரர்கள் 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் வெற்றி பெற வேண்டிய நல்லவாய்ப்பை இழந்தனர். இவ்ஆட்டத்தில் ரெண்டுல்கார் சிறப்பாக ஆடி 69 ஓட்டங்களை இந்தியாவிற்கு பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 பந்து மாற்றங்களில் 9 இலக்குகளை பறிகொடுத்து 208 ஓட்டங்களைப் பெற்றது. (16)

பிலிப்பைன்ஸ் அரசின் பலத்த எதிர்ப்புக்கும் மத்தியில் மணிலா திரும்பியிருந்தார்.

## வளைகுடா ஜெனரல் சுயசரிதம் எழுதுகிறார்!

வளைகுடா யுத்தத்தை நடத்திய அமெரிக்க ஜெனரல் நோர்மன் ச்வார்ஸ்கொப் தனது நினைவுகள் பற்றிய நூலை எழுதுவதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்.

'நொக்அவுட்' செய்து எதிரியை வீழ்த்திய பின் கோதாவை விட்டு வெளியேறிய அதிபார குத்துச் சண்டை சாம்பியனுக்கு அவரை ஒப்பிட்டிருக்கிறார் தென்புளோரிடா பல்கலைக்கழக ஆராய்ச்சித்திட்டத் தலைவர் ஜெக்மூர்.

ஓய்வுபெற்ற பின் பொது மக்கள் பார்வையில் இருந்து மறைந்துள்ள ச்வார்ஸ்கொப் சுயசரித்திரத்தை எழுதுவதற்காக 50 லட்சம் டாலர் முற்பணம் பெற்றிருக்கிறார்.

# யாழ். மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டில் மட்டும்

# ஏழு பிரதான அரச பரீட்சைகள் இரத்தாகின

## மூன்று வங்கியாளர் பரீட்சைகளும் நடைபெறவில்லை

யாழ் மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டில் மட்டும் ஏழு பிரதான அரசாங்கப் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தவிர மேலும் மூன்று வங்கியாளர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகளும் இங்கு நடைபெறாது போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

க.பொ.த. (உயர்தரம் 1991), ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை (1991) தொழில் நுட்பக் கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சை (1991), மாவட்ட எழுது வினைஞர் பரீட்சை (1991), கிராமசேவையாளர் பரீட்சை (1991), மாணவர் ஆசிரியர் தெரிவுப் பரீட்சை (1991), பட்டதாரிப் பயிலுநர் பரீட்சை (1991) ஆகிய பிரதான பரீட்சைகளே இவையாகும்.

இந்தப் பரீட்சைகளைத் திட்டமிட்டபடி நடத்தாது பரீட்சைத் திணைக்களம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்துவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்குப் பதிலாக வேறு பரீட்சைகளை நடாத்துவதற்கும் இதுவரை நடவடிக்கை யெடுக்கப்படவில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் யாழ் மாவட்டப் பரீட்சார்த்திகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தடைப்பட்ட பரீட்சைகளை நடாத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## சதாமைக் கொல்வதற்காக அமெரிக்கா வீசிய 5000 இறாத்தல் குண்டுகள்!

வளைகுடா யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் சதாம் ஹுசெய்னைக் கொல்லும் பொருட்டு அமெரிக்கா அவரது பலம் வாய்ந்த பாதுகாப்பு அரணுக்குக் குண்டு வீச முயன்றது என்றும், இதற்காகக் குறி தவறாமல் செல்லக் கூடிய இரு குண்டுகள் தயாரிக்கப்பட்டன என்றும் 'யு. எஸ். நியூஸ் அன் வேர்ல்ட் ரிபோட்' சஞ்சிகை கூறியுள்ளது.

1991 பெப்ரவரி 27 ஆம் திகதி யுத்தம் முடிய சில மணி நேரத்துக்கு முன் 5000 இறாத்தல் நிறை கொண்ட விசேட குண்டுகளை விமானப்படை விமானங்கள் இரண்டு பாக்தாத்துக்கு வடமேற்கேயுள்ள அல்-தாஜி விமானத்தள அரணில் போட்டன என்றும் சதாம் அங்கு தங்கி இருக்கிறார் என்ற ஊகத்தில் அவை போடப்பட்டன என்றும் பிரஸ்தாப சஞ்சிகை தெரிவித்துள்ளது.

## 'படையுடன் வருவேன்'

### ராஜ்குமாருக்கு பாண்டியன் எச்சரிக்கை

கன்னட நடிகர் ராஜ்குமாருக்குத் தமிழக நடிகர் பாண்டியன் சவால் விட்டுள்ளார்.

''கர்நாடகத்தில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதற்கு எதிராக தமிழக அரசு நடத்திய ஹர்த்தால் தான் நாம் கர்நாடக அரசிற்கும் அதன் மூலம் ஒரு கலவரத்தைத் தூண்டிவிடுகின்ற சில நடிகர்களுக்கும் தமிழகம் தரும் கடைசி எச்சரிக்கை.

''இதன் பின்னரும் தமிழர்கள் தாக்கப்பட்டால் என் போன்ற இளைஞர்களுடன் கர்நாடகத்திற்கும் சென்று தமிழ் மக்களின் உயிர் காப்பேன்'' என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

## மட்டு. மாவட்ட ஆசிரியர்களை மீண்டும் திரும்பப் பணிப்பு!

மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்து கண்டியில் தற்காலிகமாகக் கடமைபுரியும் சகல ஆசிரியர்களும் மீண்டும் மட்டக்களப்புக்குத் திரும்புதல் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இது குறித்த அறிவுறுத்தல்களை மட்டக்களப்பு, கண்டி மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## 'என் வீரர்களை தோற்கடிக்க 33 நாட்டு சாத்தான்கள்' - சதாம் ஹுசெய்ன்

வளைகுடா யுத்தத்தின் பின் சிதைந்து போன ஈராக் இராணுவத்தை மீண்டும் கட்டியெழுப்பி உலகில் பலம் பொருந்திய இராணுவமாக உருவாக்கப் போவதாக ஈராக் ஜனாதிபதி சதாம் தெரிவித்திருக்கிறார்.

உலகின் நான்காவது பலம் பொருந்திய தனது படையில் உள்ள 10 லட்சம் படைவீரர்கள் 33 நாடுகளைச் சேர்ந்த படைகளினால் தோற்கடிக்கப்பட்டவர்கள் என்று குறிப்பிட்ட சதாம் 'இப்படைகள் சாத்தானையும் துரோகிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தின' என்றும் கூறியுள்ளார்.

## 11 லட்சம் புத்தகங்களை எடுத்துவர 7 லட்சம் ரூபா கப்பல் செலவு!

யாழ் குடா பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கென பதினொரு இலட்சம் பாடப் புத்தகங்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்விச் சேவைகள் அமைச்சு அறிவித்திருக்கிறது.

இப்பாடப் புத்தகங்களை யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் எடுத்துவர ஏழு இலட்சம் ரூபா செலவு பிடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கப்பலில் வரும் அதிகாரி ராம்தாஸ் கொழும்பில் ஆலோசனை நடாத்தி டில்லி விரைந்து ராவைச் சந்திப்பார்!

திருகோணமலை நோக்கிப் புறப்பட்டுள்ள அக்பர் கப்பலில் வரும் 614 அகதிகளுடன் இந்தியப் புனர்வாழ்வுத் துறை உயரதிகாரி எஸ். ராம்தாஸும் வருகிறார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கொழும்பில் ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் நேரடியாகப் புதுடில்லி சென்று பிரதமர் பி.வி. நரசிம்மராவைச் சந்திப்பார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி கப்பலில் வரும் அகதிகளில் 242 பேர் ஆண்கள் என்றும் 177 பேர் பெண்கள் என்றும் ஏனையோர் சிறுவர், சிறுமியர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் ஒப்புக்கொண்ட அகதிகளில் 200 பேர் கடைசி நேரத்தில் கப்பலில் ஏற மறுத்து விட்டனர் என்பதும் தொடர்ந்து போர் நடப்பதே மறுப்புக்குக் காரணம் என்றும் ஸ்ரீலங்கா அரசினால் அமைக்கப்பட்ட அகதிகள் முகாம்களிலேயே தாம் தங்கவேண்டியிருக்கும் என அவர்கள் கூறினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

## மரண வீட்டுக்குச் சென்றவரும் மரணம்! மாரடைப்புக்கள் காரணம்!!

மாரடைப்பால் மரணமான உறவினரின் இறுதிச் சடங்குக்காகக் கொழும்பு சென்ற ஒருவர் அங்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணமான சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

சிலவாரங்களுக்கு முன் முக்கிய தேவை ஒன்றிற்காக பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் (வயது 55) கொழும்பு சென்றிருந்தார். இருதயம் பலவீனமான அவர் உடல் பலவீனமுற்று திடீர் மாரடைப்பால் மரணமானார்.

வானொலி மூலம் இவரின் மரணச்செய்தியைக் கேட்டு அவரது மைத்துனர் (45 வயதுடையவர்) பல சிரமங்களுடன் கொழும்பு சென்றடைந்தார்.

இருதய நோயாளியான இவர் பயணக் களைப்பால் பகல் முழுவதும் படுக்கையிலேயே கிடந்தார். நள்ளிரவு மாரடைப்பினால் மரணம் சம்பவித்தது. இவரும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'ஐக்கியம்', 'தேசியம்' யாருக்குச் சொந்தம்?

லலித் அத்துலத்முதலியின் புதிய கட்சியைப் பதிவு செய்வதில் அவருக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவருடைய கட்சியின் பெயரான ''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி'' யைப் பதிவு செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தேர்தல் ஆணையாளரினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கடும் வாக்குவாதம் நிகழ்ந்தது. ''ஐக்கியம், தேசியம்'' என்ற சொற்கள் குறிக்கப்பட்ட கட்சிக்கோ அல்லது தனிநபருக்கோ சொந்தம் இல்லையென லலித்தின் சார்பில் வாதிடப்பட்டது.

இவ்விசாரணையின் தீர்ப்பு காலக்கிரமத்தில் வழங்கப்படுமென தேர்தல் ஆணையாளர் கூறினார்.

## நாகராஜனுக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர்களை ஆஜராக உத்தரவு!

பத்மநாபன் கொலை வழக்கில் சந்தேக நபராகக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் தமிழக உள்துறைச் செயலர் நாகராஜனுக்கு சிகிச்சையளித்து வரும் டாக்டர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி அவரது உடல் நிலை பற்றி விளக்க வேண்டும் என்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தன்னைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி அவர் தாக்கல் செய்துள்ள மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதி இவ்வுத்தரவைப் பிறப்பித்தார்.

## பிரான்ஸில் உள்ளூர் விமானம் மலையில் மோதி 84 பேர் பலி!

பிரான்ஸில் உள்நாட்டு சேவையிலீடுபட்டிருந்த விமானமொன்று விழுந்து நொருங்கியதில் 84 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

ஏ 320 ரக இந்த விமானம் பிரான்ஸிலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்துக்குள் மலையொன்றில் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பயணிகளில் 12 பேர் மட்டும் உயிர் பிழைத்தனர்.

## அமெரிக்காவில் உணவு முத்திரை

அமெரிக்காவில் 240 லட்சம் மக்கள் உணவு முத்திரையில் தங்கியுள்ளதாகவும் அவர்கள் உண்ணுவதற்கும் போதிய உணவைப் பெறுவதற்காகவே இந்த முத்திரைத்திட்டம் அமுல் செய்யப்படுவதாகவும் கூறிய அமெரிக்க அதிகாரியொருவர் இந்தத் தொகை மாரிகாலத்தில் அதிகரிக்கும் எனவும் கூறினார்.

மாதாந்தம் 340 டொலர்களுக்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களுக்கு இந்த முத்திரை வழங்கப்படுவதாகவும் கூறிய அந்த அதிகாரி அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சி இதற்கு ஒரு காரணம் என்று கூறினார்.

### ...கைக்குண்டு...

எனினும் சம்பவம் குறித்து விசாரணை நடப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். விமானத் தளத்தில் ஏற்பட்ட வெடிகுண்டுச் சம்பவம் குறித்து அதிகாரிகள் இன்னமும் தெளிவற்ற நிலையிலேயே இருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

### அகதிகளை...

ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக் காட்டின.

அகதிகளை திருப்பி அனுப்பும் இந்தியாவின் திட்டத்திற்கு இச்சம்பவங்கள் சர்வதேசரீதியிலும் பலத்த அடியை ஏற்படுத்தலாம் என பி. பி ஸி குறிப்பிட்டது.

திருமலையில் இப்படியான பயங்கரத் தாக்குதல்கள் நடைபெறும் போது அகதிகளை அங்கு கொண்டு செல்வது பாதுகாப்பில்லை எனவும் பி பி ஸி தெரிவித்தது.

### சீனன் குடா......

யில் குழிகளும் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### திருமலை நகர் அதிர்வு

சீனன் குடா தளத்தில் ஏற்பட்ட வெடிகுண்டுச் சத்தத்தினால் திருமலை நகரப் பகுதியே அதிர்ந்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன

### நாசவேலையாக இருக்கலாம்

இதேவேளை குண்டுவெடிப்பில் 10படையினரே பலியானதாகவும் சம்பவத்திற்கு நாசவேலை காரணமாக இருக்கலாம் எனவும் கொழும்பு இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர்

### வடமராட்சியில...

சேர்ந்த அன்ரனி நிரஞ்சனி (16) என்ற இளம் பெண் காயமடைந்தார்.

பருத்தித்துறை நாலாம் குறுக்குத் தெருவில் காலை 10 30 மணியளவில் மூன்று பொம்மர்கள் குண்டுகளை வீசின. இதில் தும்பளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தி 57) என்ற தபால் ஊழியர் மரணமானார், அந்தோனிப்பிள்ளை இராசநாயகம் (27) என்பவர் காயமடைந்தார் 10 வீடுகள் சேதமடைந்தன.

(10,11,08,)

### ...ஊச்சவெளியருகே...

மிலிருந்து இரு ட்ரக்வண்டிகளிலும் இரு ஜீப்களிலும் படையினர் இதலத்துக்கு விரைந்தனர்.

இவர்களையும் வழிமறித்து புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதலை ஆரம்பித்தது இதனால் படையினர் தமது முயற்சியை கைவிட்டு முகாமுக்கு பின்வாங்கினர்.

திருமலையில் நடைபெற்ற இத்தாக்குதலில் 20 படையினர் பலியானதாக கூட்டுப் படைத் தலைமையகமும் ஒப்புக் கொண்டது. 07

## ராக்கிங் இல்லை

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இம்முறை புதிய மாணவர்கள் மீது 'ராக்கிங்' இடம்பெறவில்லை எனவும் அவர்கள் பழைய மாணவர்களால் வரவேற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல ஏனைய பல்கலைக்கழகங்களிலும் இடம்பெறவேண்டும் என மாணவர் அவைத் தலைவர் பதும சிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### வீரச்சாவு—

உதயன் (க. ராஜேந்திரன் ஹட்டன்) ஆகிய போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

## ஷெல் வீச்சு

பூநகரி பள்ளிக்குடாப்பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் அரியாலை கிழக்குப் பகுதியை நோக்கி நேற்று நண்பகல் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர். (07)

## வங்கி கடனுதவி

புலோலிமேற்குவிவசாயிகள் 45 பேருக்கு இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை கால போக வெங்காயச் செய்கைக் கடனாக6, 90, 000 ரூபாவை வழங்கியுள்ளது. (11)


கொழும்பு சென்று உங்கள் வீண் அலைச்சலையும், செலவுகளையும் தவிர்த்துக் கொள்ள யாழ் நகரில் நீங்கள் நாடவேண்டிய இடம்

**BEACON**

உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி (24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
2. வெளிநாட்டுத் தந்தி (30 மணித்தியாலயங்களில் உரியவரிடம் சேரும்)
3. FAX (ஃபக்ஸ்)

★ உள்ளூர் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்)

★ ★ வெளிநாட்டுச் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்)
(செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)

4. TELEX (ரெலெக்ஸ்) (24 மணித்தியாலங்களில் சேரும்)
5. தொலைபேசிச் செய்தி (120 மணித்தியாலங்களில் - 5நாட்களின்பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)

★ அவசர (URGENT) தொலைபேசிச் செய்தி
(பதிலுடன் 2நாட்கள் - 48 மணித்தியாலங்களில்)

6. ரேடியோ அல்லது பத்திரிகை விளம்பரங்கள்

★ மரண அறிவித்தல்கள் (2 நாட்கள்)

★ ★ பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை (3 நாட்கள்)

குறைந்த செலவில் அதிவிரைவான நாட்களில் தரமான சிறந்த கலர் படங்களை 15 நாட்களுக்குள் கழுவிப் (Printing & Developing) பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

**BEACON**

தொலைத் தொடர்புகள்

380,ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம்.

01064



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992. 01. 31ம் தேதி வரை விண்ணப்பங்கள் எண்ணாக பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:
பகுதி நேரப் போதனாசிரியர்-

உதைபந்தாட்டம் / வலைகோற் பந்தாட்டம் (ஹொக்கி) / கூடைப் பந்தாட்டம் / மேடைவரிப் பந்தாட்டம் (ரேபிள் ரெனிஸ்) / பூப்பந்தாட்டம் (பட்மின்ரன்) / உடற்பயிற்சி விளையாட்டுக்கள் / தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகள் (ஜிம்னாஸ்ரிக்ஸ்)

கொடுப்பனவு விகிதம்:
மணித்தியாலயத்திற்கு ரூபா 75/- (மாதத்திற்கு 900/- உச்ச அளவு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்ப படிவங்களையும் விபரங்களையும் இப்பல்கலைக் கழக தாபனக்கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 × 10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறை அனுப்புதல் வேண்டும்,

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-21

01063



# O|L

க. பொ. த. சாதாரணதரம்

(ஆண்டு II)

★ பகல் முழு நேர வகுப்புகள்
★ சனி, ஞாயிறு வகுப்புகள்
★ மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25 - 01 - 92

(சனி காலை 7-45 மணி)

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

இதை விடத் தெரிவு......
வேறேதுமில்லை!

01061



புதிய பிரிவு

**கணக்கியல்**

திரு. S. K. பிரபாகரன்

A/L 93 செவ்வாய், வியாழன் 3-4
A/L 92 செவ்வாய், வியாழன் 4-5

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

01057


இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷர்ஸ (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 22-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது